சிறுவினாக்கள்

1.பாரதிதாசன் குறிப்பு வரைக.

இயற்பெயர்: கனகசுப்புரத்தினம்

சிறப்புப்பெயர்: புரட்சிக்கவிஞர், பாவேந்தர்

பெற்றோர்: கனகசபை, இலக்குமி

ஊர்: புதுச்சேரி

காலம்: 29.04.1891-21.04.1964

இயற்றிய நூல்கள்: பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு, இருண்ட வீடு, தமிழியக்கம்.

பெயர்க்காரணம்: பாரதியின் கவிதை மீது கொண்ட ஈர்ப்பினால் பாரதிதாசன் என்று தம் பெயரை மாற்றிக்கொண்டார்.

விருது: பிசிராந்தையார் நாடக நூலுக்குச் சாகித்ய அகாதெமி விருது வழங்கப்பட்டுள்ளது.

கவிதைகள்: இவர் இயற்றிய கவிதைகள் அனைத்தும் 'பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள்" என்னும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன.

2.கல்வி அறிவுடைய பெண்களையும், கல்வியறிவற்ற பெண்களையும் பாரதியார் எவற்றோடு ஒப்பிடுகிறார்?பண்படாத நிலம்:

கல்வி அறிவு இல்லாத பெண்கள் பண்படாத நிலத்தைப் போன்றவர்கள், அந்நிலத்தில் புல் முதலானவை தான் விளையலாம். நல்ல பயிர் விளையாது. அதுபோல கல்வி அறிவில்லாத பெண்கள் வாயிலாக அறிவுடைய மக்கள் உருவாக மாட்டார்கள்.

நன்செய் நிலம்:

கல்வியைக் கற்ற பெண்கள் பண்பட்ட நன்செய் நிலத்தினைப் போன்றவர்கள். அவர்கள் மூலம் சிறந்த அறிவுடைய மக்கள் உருவாகின்றனர் என்கிறார் பாரதியார்.

3.பெண்களுக்கு விடுதலை பறிபோனது எதனால்?

வானூர்தியைச் செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானவை. இன்று உலகமானது ஆண்களின் கட்டுப்பாட்டில் நலிந்து போனதால் பெண்களுக்கு விடுதலை பறிபோனது.

4. "மின்னாள் வாழ்வில் மின்னாள்" - விளக்குக.

இன்று பெண்களுக்கென உள்ள வேலைகளையும் அவர்களின் விடுதலைக்கான செயலையும் பெண்களே செய்தல் வேண்டும், மின்னல் போல் ஒளிரும் இயல்புடையவள் பெண். ஆனால், கல்வியறிவு இல்லாத பெண் தன் வாழ்வில் என்றும் ஒளிர மாட்டாள் என்பதை ‘மின்னாள் வாழ்வில் மின்னாள்’ என்று கூறுகிறார் பாவேந்தர் பாரதிதாசன்.

5.வாழ்வு எப்போது நலம் பெறும்?

- உணவைச் சமைத்துத் தருவது என்பது உயிரை உருவாக்குவது போன்றதாகும்.
- “வாழ்க்கை” என்பது பொருள் செல்வத்தாலோ வீரத்தாலோ அமைவதன்று.
- அடுப்பில் உள்ள சமைக்கும் கலத்தில் சுவையை இட்டு, அருகில் இருந்து உள்ளத்து அன்போடு உணவு பரிமாறுதலில்தான் வாழ்வு நலம் பெறுகிறது.

6.பெண்கல்வி ஏன் வேண்டும் என்கிறார் பாரதிதாசன்?

சமைக்கும் பணி, பெண்களுக்குத் தவிர்க்க முடியாத கடமை எனவும், அப்பணி நல்ல தாய்மார்களுக்கு உரியது எனவும் தமிழ்த்திரு நாட்டில் இருக்கின்ற வழக்கத்தினைக் கண் இமைக்கும் நேரத்தில் நீக்க வேண்டும். அதற்குப் பெண்கள் கல்வியறிவு பெற வேண்டும் என்கிறார் பாரதிதாசன்.